சிவகங்கை செயற் பொறியாளர்(வே.பொ)(பொ)அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர்: திரு.மா.முரேஷ்குமார், பிஇ,(வி.வ),.

எண்.ஆ/ 2609/2023. நாள்: 12. 01.2024.

பொருள்: பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி 4-ல் அடங்கிய பணிகள் - நேரடி போட்டித் தேவு நாள் - 24.07.2022-ஆம் ஆண்டில் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது - சிவகங்கை, செயற்பொறியாளர் (வே.பொ) அலவலகத்திற்கு பணி நியமனம் ஆணை வழங்கியது - திரு.மு.கார்த்தீஸ்வரன், இளநிலை உதவியாளர் (பி.அ) பணியில் சேர்ந்து கொண்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடுதல்.

பார்வை :

1) சென்னை,வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண். அபபி3/95057/2019, நாள் - 02.08.2019.
2) செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடித எண். 1919/PSD-D2/2023, நாள் : 02.09.2023 மற்றும் 16.11.2023
3) சென்னை,வேளாண்மை ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.OPS5/92705/2023 நாள்: 08.12.2023
4) சென்னை,தலைமைப் பொறியாளர் (வே.பொ) அவர்களின் செயல்முறை ஆணை எண். ME.2/49207/2023, நாள் - 14.12.2023.
5) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். ஆ/2609/2023, நாள் - 22.12.2023.

--------------

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் தொகுதி-IV-ன் கீழ் 24.07.2022 அன்று நடைபெற்ற நேரடி போட்டித் தேர்வின் மூலம் இளநிலை உதவியாளர்(பி.அ)-ஆக தற்காலிகமாக தேர்ந்தெடுக்கப்பட்டு பார்வை (3)-ல் காணும் செயல்முறை ஆணையின்படி வேளாண்மை பொறியியல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணையிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, பார்வை(4)-இல் காணும் செயல்முறை ஆணையின்படி, இளநிலை உதவியாளர் (பி.அ)-ஆக சிவகங்கை மாவட்ட வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (5)-இல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி திரு.மு.கார்த்தீஸ்வரன் அவர்களுக்கு ரூ.19500-71900 (Level 8) என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிக அடிப்படையில் பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, தனியர் 26.12.2023 முற்பகல் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளர்(பி.அ)-ஆகப் பணியேற்றுக்கொண்டார்.

பார்வை (1 )-இல் காணும் சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் வழங்கிய தெளிவுரைகளின்படி பணிநியமன அதிகாரியானவர் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்தும், பார்வை (4)-இல் கண்ட சென்னை, தலைமைப்பொறியாளர் (வே.பொ) அவர்களின் செயல்முறை ஆணையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின்படியும், இவ்வலுவலக இளநிலை உதவியாளர் (பி.அ)-ஆக பணிபுரியும் **திரு.மு.கார்த்தீஸ்வரன் அவர்கள் முதன் முதலில் அரசுப்பணியில் சேர்ந்த நாளான 26.12.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பி.அ) பதவியில் பணிவரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.**

**The Regularization is subject to the outcome of the WPs Pending on the files of the Hon'ble High court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post include in Combined Civil Services Examination - IV (Group-IV)**

தனியர் இளநிலை உதவியாளர் (பி.அ) பதவியில் இரண்டு ஆண்டு கால தகுதிகாண் பருவத்தினை மூன்று ஆண்டு தொடர் பணிக்காலத்திற்குள் முடிக்க வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

செயற் பொறியாளர் (வே.பொ)(பொ),
சிவகங்கை.

பெறுநர்

திரு.மு.கார்த்தீஸ்வரன்,
இளநிலை உதவியாளர் (பி.அ),
இவ்வலுவலகம்.

நகல் : வேளாண்மை ஆணையர், சென்னை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்: தலைமைப் பொறியாளர்(வே.பொ),சென்னை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்: கண்காணிப்புப் பொறியாளர்(வே.பொ),விருதுநகர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்:இருப்புக்கோப்பு.
உபரி:1